IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, PUDUKKOTTAI
( CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)
S.C.No.24/2025
Dated:17.02.2026
Deposition of witness for :P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செந்தில்குமார் | வயது | : | 35/2026 |
| தகப்பனார் பெயர் | : | துரைராஜ் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | இரண்டாம் நிலை காவலர்-2122 , நகர காவல் நிலையம் |

Solemnly affirmed by Thiru. Srinivasan, Grade -I Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873

**A1, A2 present. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

**1) நான்** தற்போது புதுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

3) கடந்த 04.08.2024ம் மாலை 16.00 மணிக்கு நானும், நானும் சுரேஷ் முதல் நிலை காவலர் ஆகியோர் காவல் உதவி ஆய்வாளர் பிரபாகரன் அவர்கள் தலைமையில் ரோந்து சென்றபோது, புதுக்கோட்டை பிருந்தாவனம் முக்கம் அருகே, எதிரி கையில் பெரிய இரும்பு அருவாளை வைத்துக்கொண்டு, பொதுமக்களிடம் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்.

4) அவர் கையில் இரும்ப அருவாளை வைத்திருந்ததற்கு காரணம் எதுவும் சொல்லவில்லை. பின்பு அவர் கையில் வைத்திருந்த இரும்புவாளை மகஜரில் கைப்பற்றினோம். அந்த சுரேஷ் மற்றும் நானும் சட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ1 ஆகும். என்னிடம் காட்டப்படும் இரும்பு அருவாள்தான் எதிரி கையில் வைத்திருந்தார். **அது சா.பொ.1** ஆகும்.

5) பின்பு எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எதிரியையும், சான்று பொருளையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) ஆய்வாளர் என்னுடைய மேலதிகாரி என்றால் சரிதான். எதிரியை எங்களுக்கு முன்பே தெரியும். சம்பவ இடம் என்று நான் சொல்வது புதுக்கோட்டை பிருந்தாவனம் முக்கம் ஆகும்.

2) சம்பவ இடத்தை சுற்றி நிறைய கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

3) அந்த இடம் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்றால் சரிதான்.

4) நான் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், ஆஜர் எதிரிக்கும், சா.பொ.1ற்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக மேலதிகாரிகளின் உத்தரவின்படி எதிரிகளுக்கு எதிராக பொய்யான வழக்கு போட்டு, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட அமா்வு நீதிபதி,
புதுக்கோட்டை.

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, PUDUKKOTTAI
( CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)
S.C.No.24/2025
Dated:17.02.2026
Deposition of witness for :P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சுரேஷ் | வயது | : | 35/2026 |
| தகப்பனார் பெயர் | : | ராமன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | முதல் நிலை காவலர்-2213 , நகர காவல் நிலையம் |

Solemnly affirmed by Thiru. Srinivasan, Grade -I Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873

**A1, A2 present. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

**1) நான்** தற்போது புதுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

3) கடந்த 04.08.2024ம் மாலை 16.00 மணிக்கு நானும், நானும் செந்தில்குமார் இரண்டாம் நிலை காவலர் ஆகியோர் காவல் உதவி ஆய்வாளர் பிரபாகரன் அவர்கள் தலைமையில் ரோந்து சென்றபோது, புதுக்கோட்டை பிருந்தாவனம் முக்கம் அருகே, எதிரி கையில் பெரிய இரும்பு அருவாளை வைத்துக்கொண்டு, பொதுமக்களிடம் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்.

4) அவர் கையில் இரும்ப அருவாளை வைத்திருந்ததற்கு காரணம் எதுவும் சொல்லவில்லை. பின்பு அவர் கையில் வைத்திருந்த இரும்புவாளை மகஜரில் கைப்பற்றினோம். அந்த செந்தில்குமார் மற்றும் நானும் சட்சிகளாக கையெழுத்து செய்தோம்.

5) பின்பு எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எதிரியையும், சான்று பொருளையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) ஆய்வாளர் என்னுடைய மேலதிகாரி என்றால் சரிதான். எதிரியை எங்களுக்கு முன்பே தெரியும். சம்பவ இடம் என்று நான் சொல்வது புதுக்கோட்டை பிருந்தாவனம் முக்கம் ஆகும்.

மு.மா.அ.நீ.,

2) சம்பவ இடத்தை சுற்றி நிறைய கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

3) அந்த இடம் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்றால் சரிதான்.

4) நான் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், ஆஜர் எதிரிக்கும், சா.பொ.1ற்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக மேலதிகாரிகளின் உத்தரவின்படி எதிரிகளுக்கு எதிராக பொய்யான வழக்கு போட்டு, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
புதுக்கோட்டை.